RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-5 | இதழ்- 68 | மார்ச்.17 2026 செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5







# வேட்புமனு தாக்கல் நேரம் முதல் பறக்கும் படைக்கு அறிவுரை வரை : தேர்தல் முன்னேற்பாடுகள்

சென்னை: மார்ச்.17-

சோதனைகளின்போது பொதுமக்களை தொந்தரவு செய்யக்கூடாது என்று பறக்கும் படைக்கு அறிவுறுத்தல் வழங்கப் பட்டுள்ளது. மக்கள் தகுந்த ஆவணங்களை வைத்திருந்தால் பணத்தை உடனே திருப்பித்தர உத்தரவிட்டுள்ளோம் என தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "மார்ச் 30 முதல் ஏப்.6 வரை பொதுவிடுமுறை நாட்களைத் தவிர மற்ற நாட்களில் காலை 11 மணி முதல் பகல் 3 மணி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம். உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.50 ஆயிரத்திற்கு மேல் பணம் எடுத்துச் செல்லக் கூடாது. அப்படி எடுத்துச் செல்லப்படும் பணம் எங்கிருந்து பெறப்பட்டது என்பதற்கான ஆவணம் கட்டாயம் தேவை.

சோதனைகளின்போது பொதுமக்களை தொந்தரவு செய்யக்கூடாது என்று பறக்கும் படைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.



மக்கள் தகுந்த ஆவணங்களை வைத்திருந்தால் பணத்தை உடனே திருப்பித்தர உத்தரவிட்டுள்ளோம்.

வாக்களிக்கும் இடத்தில் செல்போன்களுக்கு அனுமதி இல்லை. செல்போன்களை வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பாக வைக்க வசதி செய்து தரப்படும். வாக்குச்சாவடி விவரங்கள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். தமிழகத்தில், தோதலை முன்னிட்டு 2,106 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

டிஜிட்டல் முறை பணப் பரிவர்த்தனைகளும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் வந்ததில் இருந்து இதுவரை ரூ.1.26 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டுமே பரப்புரை செய்யலாம்; ஆன்லைன் மூலம் மட்டுமே பரப்புரைகளுக்கு அனுமதி கேட்கப்பட வேண்டும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



## விளாத்திகுளம் மாணவி வழக்கில் 5 பேரிடம் டிஎன்ஏ பரிசோதனை

### உயர் நீதிமன்றத்தில் அரசு தகவல்

மதுரை: மார்ச்.17-

விளாத்திகுளம் மாணவி வழக்கு தொடர்பாக 5 பேரிடம் டிஎன்ஏ பரிசோதனை நடத்த ரத்த மாதிரி சேகரிக்கப்பட்டுள்ளது என உயர் நீதிமன்றத்தில் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தூத்துக்குடியை சேர்ந்த வழக்கறிஞர் மாரீஸ்வரி, விளாத்திகுளத்தில் 12 ஆம் வகுப்பு சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கை சிபிஐக்கு மாற்றக் கோரி உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது அரசுத் தரப்பில், "ஆய்வக பரிசோதனை முடிவுகள் வர வேண்டியுள்ளது. சிசிடிவி காட்சிகளைக் கொண்டு சந்தேகத்துக்குரிய மானவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சந்தேகத்துக்கு இடமானவர்களிடம் டிஎன்ஏ மாதிரிகள் பெறப்பட்டு விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

5 பேரிடம் டிஎன்ஏ பரிசோதனைக்காக ரத்த மாதிரி சேகரிக்கப்பட்டுள்ளது," எனத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் நீதிபதிகள், "விசாரணை சரியான முறையில் சென்று வருகிறது. பெற்றோர் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். வாக்குமூலத்தை வீடியோ, ஆடியோவாக பதிவு செய்ய வேண்டும். நடவடிக்கை எடுக்காத காவல்துறையினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அறிவியல் முறையில் விசாரணையை மேற்கொள்ள வேண்டும். மாணவி காணவில்லை என்பது முக்கியமான புகார். அதில் காவல்துறையினர் அலட்சியத்துடன் செயல்படக்கூடாது. விசாரணை குறித்த நிலை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். விசாரணை ஏப்ரல் 2 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது," என உத்தரவிட்டனர்.

## திமுக அரசுக்கு எதிரான தேஜகூ போராட்டம்: இபிஎஸ் அழைப்பு

சென்னை: மார்ச்.17-

தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமைகள்; சட்டம் ஒழுங்கு சீர்கேடுகள்; போதைப் பொருட்கள் புழக்கம் உள்ளிட்டவற்றை கண்டித்து வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் நாளை (மார்ச் 17) ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2021ஆம் ஆண்டு, முதல்வர் ஸ்டாலின் தமிழ்நாட்டினுடைய முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, திமுகவினுடைய ஆட்சியில் தமிழ் நாடு கஞ்சா, கள்ளச் சாராயம், போதைப் பொருள் மாஃபியாக்களின் வேட்டைக்காடாக மாற்றப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் தெருக்களில் கஞ்சா புழக்கம் இல்லாத இடமே இல்லை என்கிற நிலையை இந்த அரசு உருவாக்கி இருக்கிறது. வேதனையோடு சொல்வதென்றால், கல்லூரி மாணவர்களும், மாணவிகளும், பள்ளிக்கூட மாணவ மாணவிகள்கூட கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை மிகச் சாதாரணமாக பயன்படுத்துகிற செய்திகளும், காட்சிகளும் நாட்டின் முக்கிய ஊடகங்களிலேயே வெளியிடப்பட்டு வருகிறது.

சட்டம் ஒழுங்கு சந்தி சிரித்த நேரத்திலும் காவல் துறையை கையில் வைத்திருக்கின்ற தமிழ்நாட்டின் முதல்வர் கள்ள மவுனம் சாதித்ததோடு இல்லாமல் விளம்பர ஆட்சிக்கான போட்டோ ஷூட்களை நடத்திக்கொண்டிருந்தார்.



போதை கும்பல், கூலிப் படைகள் ஏற்படுத்திய சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளில் உச்சமாக, பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் எதிரான, வரலாற்றில் முன் எப்போதும் பார்த்திடாத அளவிற்கு மிகக் கொடூரமான பாலியல் கொடுமைகளும், கொலைகளும் அரங்கேற்றப்படுகின்றன.

திமுக ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து, கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 30 லாக்கப் மரணங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 4 பட்டியலின இளைஞர்கள் லாக்கப்பில் மரணமடைந்துள்ளனர். இதிலிருந்து, திமுக ஆட்சியில் சட்டம்ஒழுங்கு எதை நோக்கிச் செல்கிறது என்பதையும்; வேலியே பயிரை மேய்கிறது என்பதையும் மக்கள் தெளிவாக உணர்ந்து மிகுந்த வேதனைப்படுகின்றனர். தமிழ் நாட்டு மக்கள் பாதுகாப்பின்மையை உணர்கிறார்கள். தமிழ் நாடு ரவுடிகளினுடைய புகலிடமாக, கூலிப் படைகளின் ராஜ்ஜியம் நடக்கின்ற இடமாக மாற்றப்பட்டிருக்கிறது. திமுக அரசு சட்டம்ஒழுங்கு பிரச்சினைகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது ஏன் என்கிற கேள்வியை மக்கள் கேட்கிறார்கள்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, போதைப் பொருள் விற்பனையில் திமுக பிரமுகரே கைதாவதும்; கள்ளச் சாராய விற்பனையில் திமுக பிரமுகரே ஈடுபட்டிருப்பதும்; மணல் கொள்ளை, இயற்கைவளக் கொள்ளை குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்கள் மீது கொலைவெறித் தாக்குதலில் திமுகவின் சட்டமன்ற உறுப்பினரே ஈடுபட்டிருப்பதும்; ஏழை, எளிய மக்களை ஏமாற்றி கிட்னி திருடிய வழக்கில் திமுகவின் சட்டமன்ற உறுப்பினருக்குச் சொந்தமான மருத்துவமனையையே குற்றம் சாட்டப்பட்டிருப்பதும்; பல்வேறு பாலியல் வன்கொடுமைகளில் ஆளுங்கட்சி பிரமுகர்களே முதன்மைக் குற்றவாளிகளாக ஈடுபட்டிருப்பதும்; இந்த குற்றங்களுக்கெல்லாம் ஆளுங்கட்சியும், முதல்வரும் அரணாக நின்று பாதுகாப்பு கொடுக்கிறார்களோ என்கிற பெரும் சந்தேகத்தை மக்களுக்கு ஏற்படுத்தி இருக்கிறது.

திமுக ஆட்சியின் மேற்கண்ட மக்கள் விரோதச் செயல்களின் வெளிப்பாடுதான், ஆளும் கட்சிக்காரர்களை மக்கள் ஆங்காங்கே தடுத்து நிறுத்தியும், வெளியேறச் சொல்லி முழக்கமிட்டும் போராட்டங்களை முன்னெடுக்கிறார்கள்.

எனவே, இந்த கொடூர ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கவும், இந்த மக்கள் விரோத ஆட்சியாளர்களுடைய முகத்திரைகளை கிழிக்கும் வண்ணமும், தமிழ்நாடு முழுவதும் அனைத்து வருவாய் மாவட்டத் தலைநகரங்களிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி பெருந்திரளாக மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கிறது.

தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமைகள்; சட்டம்ஒழுங்கு சீர்கேடுகள்; போதைப் பொருட்கள் புழக்கம்; விலைவாசி உயர்வு முதலானவற்றை கட்டுப்படுத்தத் தவறிய, நிர்வாகத் திறனற்ற ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசைக் கண்டித்து, கிழகத்தின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகள் இணைந்து, நாளை (மார்ச் 17) வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டங்களில் பெருந்திரளான அளவில் கலந்துகொள்ள பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தவெகவில் 'உள்ளடி' அரசியல் தீவிரம்: வேட்பாளர்களை கண்டறிய விஜய் திணறல்?!

சென்னை, மார்ச்.17-

சட்டப்பேரவை தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தலை எப்படி எதிர்கொள்வது என முடிவெடுக்காமல் இன்னமும் திணறி வருகிறது தவெக. பாஜகவோடு கூட்டணிக்கு போகலாம் என ஒரு தரப்பு சொல்ல, தனித்தே நின்று சாதிக்கலாம் என இன்னொரு தரப்பு சொல்வதால், என்ன செய்வது என்று புரியாமல் தவிக்க ஆரம்பித்திருக்கிறார் விஜய் என தகவல்கள் கூறுகின்றன.

கட்சி ஆரம்பித்து, மாநாடு போட்டு, மக்கள் சந்திப்புகளை நடத்தி உற்சாகத்தோடுதான் இருந்தார் விஜய். 1977ல் எம்ஜிஆர் பின்னால் கூட்டணிக் கட்சிகள் அணிவகுத்தது போல, தன்னோடும் பலரும் வருவார்கள் என்று நம்பினார். அதனால்தான் 'ஆட்சியில் பங்கு தருகிறோம்' ஆசை வார்த்தைகளை சொல்லி தூண்டிலும் போட்டு பார்த்தார் விஜய். 'அவர் வருகிறார், கூடவே இவரும் வருகிறார்' என்று சொல்லி விஜய்யை கனவு உலகத்தில் மிதக்கவிட்டனர் சில நிர்வாகிகள்.

சில கட்சிகள் ஆரம்பத்தில் தவெக பக்கம் தூது விட்டதால், விஜய் தரப்பு இன்னும் குதூகலமானது. ஆனால், பிரதான கட்சிகளிடம் 'பேரம்' பேசவே தன்னை பயன்படுத்துகின்றனர் என்பதை அப்போது விஜய் அறியவில்லை. இப்போதுவரை எந்தக் கட்சியும் தவெக பக்கம் வரவில்லை. இன்னும் சசிகலாவும், ராமதாஸும் தான் எந்தக் கூட்டணிக்கும் போகாமல் பாக்கி இருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் விஜய் பக்கம் போகலாம், அவ்வளவுதான்.

இன்னொரு பக்கம் விஜய்யை தேசிய ஜனநாயக கூட்டணியில் கொண்டுவர கடுமையாக பாஜக முயற்சித்து வருகிறது. 40 தொகுதிகள், துணை முதல்வர் பதவி வரை விஜய்க்கு கொடுக்க என்டிஏ தரப்பு தயாராக உள்ளது. இதனை ஏற்கலாம் என ஒரு தரப்பும், வேண்டாம் என மற்றொரு தரப்பும் மல்லுக்கட்டி வருகிறார்.

வேட்பாளர் தேர்வில் திணறும் தவெக:



ஒரு தேர்தலை சந்திப்பதற்கு உள்ளாகவே தவெகவில் பல அதிகார மையங்கள் முளைத்துள்ளன. ஜான் ஆரோக்கியராஜ், புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜூனா, செங்கொட்டையன் என ஆளுக்கொரு பக்கம் விஜய்யை உலுப்பி வருகிறார்கள்.

இவர்கள் தரப்பில் ஆளுக்கொரு வேட்பாளர் பட்டியலையும் விஜய்யிடம் நீட்டியுள்ளனர். இதில், ஒருவர் சொல்லும் வேட்பாளரைப் பற்றி, இன்னொரு நிர்வாகி விஜய்யிடம் 'எக்கச்சக்கமாக' போட்டுக் கொடுக்கிறாராம். இவர்களில் யார் சொல்வதுதான் உண்மை, யாருக்கு தொகுதியில் செல்வாக்கு உள்ளது என கள நிலவரம் தெரியாமல் குழம்பித் தவிக்கிறாராம் விஜய்.

இதுமட்டுமின்றி, விஜய்க்கு நெருக்கமான சில முக்கிய புள்ளிகள், 'சீட்' கேட்பவர்களிடம் '3 சி' வரை வசூல் செய்வதாகவும் புகார் எழுந்துள்ளது. இதனால், விஜய் ரசிகர் மன்ற காலத்திலிருந்து உழைத்த பலரும் 'அந்த தொகை'யை கொடுக்க வழியின்றி விக்கித்து நிற்கின்றனர்.

தற்போது புதிதாக கட்சிக்கு வந்த பலரும், 'கரன்சி'யை கைமாற்றி சீட்டை உறுதி செய்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது. இதில் தொகுதிக்கே அறிமுகமில்லாத பலரும் சீட்டை உறுதி செய்துள்ளதால், நிர்வாகிகள் விரக்தியில் உள்ளதாகவும் தகவல் பரவுகிறது.

இன்னொரு பக்கம் கட்சியின் முக்கிய தலைவர்கள் பலரும் தங்களுக்கு வேண்டப்பட்ட நபர்களுக்காக பணத்தை கட்டி 5 தொகுதிகள், 10 தொகுதிகள் என புக் செய்வதாக புகார்கள் பறக்கிறது. அப்படி இப்படி எனப் பார்த்தாலும் சுமார் 150 தொகுதிகளுக்கு மட்டுமே 'வொர்த்'தான வேட்பாளர்கள் சிக்கியுள்ளனர் என்று சொல்லப்படுகிறது. மற்ற தொகுதிகளை கடைசி நேரத்தில் வரும் கூட்டணி கட்சிகளிடம் தள்ளிவிட்டு விடலாம் என்ற நம்பிக்கையோடு இன்னமும் காத்திருக்கிறது தவெக.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நிலையில், வேட்பாளர் தேர்விலும், கூட்டணி விவகாரத்திலும் இன்னமும் சிக்கல் நீடிக்க சில நிர்வாகிகள்தான் காரணம் என சொல்லப்படுகிறது. எந்த விஷயத்திலும் விஜய் ஒரு முடிவுக்கு வரும் நேரத்தில், முக்கிய நிர்வாகிகள் சிலர் புகுந்து தங்களுக்கு சாதகமாக அவரை குழப்பி விட்டு விடுவதாகவும் மேலிடத்தில் இருந்து தகவல்கள் கிடைக்கின்றன.

வேட்புமனுத் தாக்கல் தொடங்க இன்னும் இரு வாரங்களே இருக்கும் நிலையில், வேட்பாளர்களையே இன்னும் முடிவு செய்யவில்லை என்றால், எப்போது பிரச்சாரத்துக்கு போவது, எப்போது மக்களை சந்திப்பது என்று நிர்வாகிகள் புலம்ப ஆரம்பித்துள்ளனர்.

விஜய்யின் முகம்தான் எங்கள் 'பிராண்ட்', அது மட்டுமே போதும் என மலைபோல தவெக நம்பிக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்த 'பிராண்ட்' மட்டுமே வெற்றிக்கனியை பெற்றுத் தருமா என்று நிர்வாகிகளே கேள்வி எழுப்ப ஆரம்ப ஆரம்பித்துவிட்டனர்.



# மோட்டார் வாகன விபத்தில பாதிக்கப்பட்டோருக்கான விபத்துக்கான இழப்பீட்டுத் தொகை காசோலைக்கான வழங்கப்பட்டது

தேனி மார்ச். 17-
தேனி மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவில் நடைபெற்ற தேசிய மக்கள் நீதிமன்றத்தில் மோட்டார் வாகன விபத்தில பாதிக்கப்பட்டோருக்கான விபத்துக்கான இழப்பீட்டுத் தொகை ரூ.72,00,000/ (ரூபாய் ஏழுபத்து இரண்டு இலட்சம்) பெறுவதற்கான (Chola Mandalam General Insurance) காசோலை யினை பாதிக்கப்பட்ட K.சண்முகப்பிரியா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு. MCOP.No.117/2022 கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், தேனி என்ற வழக்கிற்கு மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி. சொர்ணம் யி. நாடராஜன் அவர்கள் வழங்கினார். மேலும் இந்த வழக்கில் வாதி தரப்பு வழக்கறிஞரும், பிரதிவாதி சார்பாக காப்பீட்டு நிறுவன வழக்கறிஞர்களும் மற்ற வழக்கறிஞர்களும் உடனிருந்தனர்.

தேனி மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவில் நடைபெற்ற தேசிய மக்கள் நீதிமன்றத்தில் மோட்டார் வாகன விபத்தில பாதிக்கப்பட்டோருக்கான விபத்துக்கான இழப்பீட்டுத் தொகை ரூ.20,00,000/ (ரூபாய் இருபது இலட்சம்) பெறுவதற்கான (Oriental Insurance) காசோலை யினை பாதிக்கப்பட்ட Rajalakshmi - Bethuraj மற்றும் அவரது குடும்பத்தினருக்கு. தலைமைக் குற்றவியல் நீதித்துறை நீதிமன்றம், தேனி MCOP.No.91/2025 என்ற வழக்கிற்கு மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி. சொர்ணம் J. நாடராஜன் அவர்கள் வழங்கினார். மேலும் இந்த வழக்கில் வாதி தரப்பு வழக்கறிஞரும், பிரதிவாதி சார்பாக காப்பீட்டு நிறுவன வழக்கறிஞர்களும் மற்ற வழக்கறிஞர்களும் உடனிருந்தனர்.



■ சட்டமன்றத் தேர்தல் விதிமுறைகள் அமலுக்கு வந்த நிலையில் கிருஷ்ணகிரியில் ஆவணம் இல்லாமல் கொண்டுவரப்பட்ட பணம் பறிமுதல்:கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சின்ன பெல்லாரம்பள்ளி கூட்டு சாலையில் SST Team-III வாகன தணிக்கையில் மாருதி ஆல்டோ K10 (TN 87 6574) காரில் வந்த திரு. சதீஷ்குமார் (முருகன் மகன்) என்பவரிடமிருந்து ஆவணங்கள் இல்லாமல் கொண்டுவரப்பட்ட ரூ.1,08,400 பறிமுதல் செய்யப்பட்டது.பறிமுதல் செய்யப்பட்ட தொகை 53 கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி உதவி தேர்தல் நடத்தும் அலுவலரும் வட்டாட்சியருமான ரமேஷ் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.பின்னர் அந்த பணம் கிருஷ்ணகிரி சார் நிலை கருவூல அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.





# சமுதாய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் திறப்பு மகளிர்களுக்கு மின்சார இருசக்கர வாகனங்கள் வழங்கல், மதியழகன் எம் எல் ஏ பங்கேற்பு

கிருஷ்ணகிரி, மார்ச். 17-
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், காவேரிப்பட்டிணம் ஒன்றியம் ஜெகதாப் கூட்ரோடு நடேசன் கடை அருகில் சமுதாய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் திறப்பு விழா மற்றும் கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி BDA60 மகளிர்களுக்கு மின்சார இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியை மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சங்கர் தர்மன் ஏற்பாடு செய்திருந்தார். விழாவில் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே. மதியழகன், MLA கலந்து கொண்டு சமுதாய குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, BDA 60 மகளிர்களுக்கு மின்சார இருசக்கர வாகனங்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் அன்பரசு, ஒன்றிய செயலாளர்கள் சுப்பிரமணி, சரவணன், நகர செயலாளர் பாபு, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பாரி,மாவட்ட வர்த்தக அணி மணி விஜயன், ஒன்றிய அவை தலைவர் இளங்கோ, மாவட்ட துணைச் செயலாளர் கோவிந்தசாமி, ஒன்றிய அவை தலைவர் இளங்கோ, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சங்கர்,திமுக நிர்வாகிகள் பரத், தமிழ்செல்வம்,மதியழகன், சிவப்பிரகாசம், சிற்றரசு, உத்திர மணி, ஊர் கவுண்டர் சந்திரன், ஜெகதாப் கோவிந்தராஜ், மற்றும் காவேரிபட்டணம் ஒன்றியங்களை சேர்ந்த திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

# வாக்குச் சாவடி மையங்களில் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

போடிநாயக்கனூர். மார்ச்.. 17-
தேனி மாவட்டம், 200.போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொட்டக்குடி பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி மற்றும் குரங்கனி, முந்தல் ஆகிய பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களில் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்டஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு, தேனி மாவட்டத்தில் உள்ள 198 ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதி. 199. பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி. 200.போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி மற்றும் 201. கம்பம் சட்டமன்றத் தொகுதி ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் அடிப்படை வசதிகளை உறுதி செய்ய இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இன்று 200.போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொட்டக்குடி பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி மற்றும் குரங்கனி, முந்தல் ஆகிய பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களில் மின்சார வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி மற்றும் வாகன நிறுத்துமிடம் வசதி, சாய்வுதளம் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுலவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், வாக்குச்சாவடி மையங்களில் பழுதுகள் ஏதேனும் இருந்தால், அதனை உடனடியாக சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறும்குறிப்பாக, ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச்சாவடி மையங்களை கொண்டுள்ள வாக்குச்சாவடி அமைவிடங்களில் தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் மற்றும் வாக்காளர்கள் எந்தஒரு இடையூறுமின்றி வாக்களிக்கும் வகையில் தனித்தனியாக தடுப்புகள் அமைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு துறை சார்ந்த அலுவலர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுலவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வின்போது, போடிநாயக்கனூர் வட்டாட்சியர்.சந்திரசேகரன், வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி மலர்விழி உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனி ருந்தனர்.



# செங்குன்றத்தில் பாஜக அமைப்புசாரா தொழிற்பிரிவு பொதுக்கூட்டம்

மாதவரம், மார்ச். 17-
மாதவரம் தொகுதி செங்குன்றம் அண்ணா பேருந்து நிலையம் அருகே பாஜக அமைப்புசாரா தொழிற் பிரிவு மாதவரம் சட்டமன்ற தொகுதி சார்பில் பொதுக்கூட்டம் அமைப்புசாரா தொழிற்பிரிவின் மாநில அமைப்பாளர் ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட அமைப்புசாரா பிரிவு தலைவர் பிச்சாண்டி அனைவரையும் வரவேற்றார். மாவட்ட தலைவர் பாஸ்கர், சட்டமன்ற அமைப்பாளர் சென்னை சிவா, மாநில அமைப்பிசாரா பிரிவு செயலாளர் கிஷோர்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக பிரிவுகளின் மாநில அமைப்பாளர் கே.டி.ராகவன், முன்னாள் பால்வளத்துறை அமைச்சரும் அ.தி.மு.க. மாவட்ட செயலாளருமான வி. மூர்த்தி, மாநில செயலாளர் சதீஷ் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். இதில் மாவட்ட பொதுச் செயலாளர் எம்.ஏ.குமரன், மாநில அமைப்புசாரா பிரிவு செயலாளர்கள் பரசுராமன், ஜெய லட்சுமி,அமைப்புசாரா தொழிற்பிரிவின் மாநில சமூக ஊடக அமைப்பாளர் வழக்கறிஞர் கோபிநாத், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், மண்டல தலைவர்கள் ரஜினி, குலாலர் நல சங்கம் மாநில தலைவர் மாமன்னன், மாநில செயலாளர் லோகநாதன், மா நில பொருளாளர் கலூராயன் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் அனைத்துநிலை நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியத்தில் இரண்டு புதிய டிரான்ஸ்பார்மர்கள் துவக்க விழா

மாதவரம், மார்ச். 17-
மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியத்திற்கு உட்பட்ட அரக்கம்பாக்கம் ஊராட்சி அருந்ததிபாளையம், மோரை ஊராட்சி வீராபுரம் வினோ நகர் ஆகிய பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக புதிதாக 2 மின்மாற்றிகள் (டிரான்ஸ்பார்மர்கள்) துவக்க விழா வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் கோ. தயாளன் தலைமையில் நடைபெற்றது.ஆவடி கோட்டம் மின் பகிர்மான செயற்பொறியாளர் கிறிஸ்டோபர்லியோராஜ், உதவி செயற்பொறியாளர் ராஜேஷ்சன், உதவி பொறியாளர் பாண்டுரங்கன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்மன்ற உறுப்பினருமான எஸ். சுதர்சனம் கலந்துகொண்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக



2 புதிய மின்மாற்றி டிரான்ஸ்பார்மர்களை துவக்கி வைத்து பொதுமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார். இதில் அயலகஅணி மாவட்ட அமைப்பாளர் அரக்கம்பாக்கம் கோவிந்தராஜ், வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய அவைத்தலைவர் ஏழுமலை, துணைச் செயலாளர்கள் ராம்தாஸ், குணாதயாநிதி, ஒன்றிய குழு முன்னாள் உறுப்பினர் பிரபு, முன்னாள் மோரை ஊராட்சி மன்ற தலைவர் திவாகரன், வில்லிவாக்கம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இளம்பரிதி, துணை அமைப்பாளர்கள் ஹரிகிருஷ்ணன், கார்த்திக் மற்றும் நிர்வாகிகள் சரவணன், பாஸ்கர், செல்வி, ஹேமா, அம்மு, ஆதியோகித் உள்ளிட்ட மின்வாரிய ஊழியர்கள், பொதுமக்கள், குடியிருப்போர் நலச் சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



# ஆப்பிள் கிரிச்பிளே ஸ்கூல் ஆண்டு விழா

மாதவரம், மார்ச். 17-
திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி பாடியநல்லூர் ஊராட்சி எம்.ஏ. நகரில் இயங்கிவரும் ஆப்பிள் கிரிச்பிளே ஸ்கூல் 15ம் ஆண்டு மழலையர் பட்டமளிப்பு விழா மற்றும் மகளிர் தின விருது வழங்கும் நிகழ்ச்சி பாடியநல்லூர் ஸ்ரீ அங்களா ஈஸ்வரி ஆலய மகா மண்டபத்தில் பள்ளியின் நிறுவனர் டாக்டர் ராஜேஸ்வரி ரஞ்சித் தலைமையில் நடைபெற்றது.

பள்ளியின் முதன்மை நிர்வாக அதிகாரி ரஞ்சித் அனைவரையும் வரவேற்றார்.விழாவில் 3 முதல் 4 வயது வரையுள்ள மழலையர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் விதமாக கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், நடனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக விஜய் தொலைக்காட்சி புகழ் நடிகரும் திரைப்பட நடிகருமான தங்கதுரை கலந்துகொண்டு மழலையர்களுக்கு பட்டம், சான்றிதழ் வழங்கியும் மற்றும் சாதனை படைத்துவரும் மகளிர்களுக்கு சாதனையார் விருதினை வழங்கி வாழ்த்துரையாற்றினர். இதில் பள்ளியின் ஆசிரியர்கள், பெற்றோர்கள் திரளாக கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 யொட்டி, அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சியினர் தேர்தல் நடத்தை விதிமுறைகள் கடைபிடிப்பது குறித்து ஆய்வுக் கூட்டம், மாவட்டதேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக் குறள், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது) கிருஷ்ணன் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரதிநி திகள் உள்ளனர்.

# மார்ச் 19, 20ம் தேதிகளில் மாநிலங்களவை அமர்வுகள் கூடாது என அறிவிப்பு

டெல்லி, மார்ச்.17-
ரம்ஜான், நவராத்திரி பண்டிகையை ஒட்டி, மார்ச் 19, 20ம் தேதிகளில் மாநிலங்களவை அமர்வுகள் நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு மாற்றாக, வார இறுதி நாட்களான மார்ச் 28, 29ம் தேதிகளில் அமர்வு கூடும் எனவும் தெரிவிக்கபப்ட்டுள்ளது.

# நீலகிரி மாவட்டம் குன்னூர் தோட்டக்கலை சார்பில் கொல்லிமலை கிராமத்தில் ஒருங்கிணைந்த பயர்பாதுகாப்பு குறித்த செயல் விளக்கம்



நீலகிரி மார்ச். 17-

தோட்டக்கலைத்துறை வட்டாரத்தில் விரிவாக்க குன்னூர் சீரமைப்புத்திட்டம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் (அட்மா) கீழ் விவசாயிகளுக்கான பயிற்சிகள். கண்டுணர்வு சுற்றுலாக்கள் போன்ற பல்வேறு விரிவாக்க திட்டங்கள் விவசாயிகள் பயனடையும் வகையில் நடைபெற்றுவருகிறது.

அதில் ஒரு பகுதியாக ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு குறித்த செயல் விளக்கமானது தோட்டக்கலை உதவி இயக்குநர் உத்தரவின்படி கொல்லிமலை கிராமத்தில் நடைபெற்றது. இது குறித்து உதவி தொழில்நுட்ப மேலாளர் ஜி.ஸி.அபினேஷ் கூறுகையில் இச்செயல்விளக்கத்தின் மூலம் இரசாயண பூச்சி கொல்லிகளை பயன்படுத்துவதை தவிர்த்து அங்கக முறையில் மஞ்சள் ஒட்டுப்பொறி, இனகவர்ச்சிபொறி, டிரைகோடெர்மா விரிடி. வேப்பம் எண்ணெய். பெசிலோமைசிஸ் போன்றவற்றை பயன்படுத்தி பூச்சிகளை கட்டுப்படுத்தலாம் மேலும் இதில் பயிர்களில் சாறு உறிஞ்சி சேதம் விளைவிக்கும் பூச்சிகள் மஞ்சள் வண்ண ஒட்டுபொறியினால் ஈர்க்கப்பட்டு அவைகள் அந்த அட்டையில் ஒட்டிகொள்வதன் மூலம் பயிர்சேதாரம் தடுக்கப்படுவதோடு பூச்சிகளின் பெருக்கம் தடைப்பட்டு எண்ணிக்கையும் குறைகிறது என்றார்.

இச்செயல் விளக்கத்திற்கு வருகை புரிந்த உதவி தொழில்நுட்ப மேலாளர் அவர்கள் இரசாயண பூச்சிக்கொல்லிகள் கி.ஜான்போஸ்கோ பயன்படுத்துவதினால் ஏற்படும் தீமைகள் குறித்து விளக்கினார் மேலும் பயனாளிகளுக்கு செயல் விளக்க தொகுப்பினை வழங்கினார். இச்செயல் விளக்கமானது விவசாயிகளிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

# பொழிச்சலூரில் தாய் பாசகரங்கள் சாரிடபிள் ட்ரஸ் சார்பில் 2 ஆம் ஆண்டு விழா

## பொய்கால் குதிரை, சண்டை மேள்ம் முழங்க வெகு விமர்சியாக நடைபெற்றது





தாம்பரம் மார்ச். 17-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பொழிச்சலூரில் தாய் பாசகரங்கல் சாரிடபிள் ட்ரஸ்ட் நடத்தும் 2 ஆம் ஆண்டு விழா நிறுவனர் நதியா தலைமையில் அகதீஸ்வரன் நகரில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக ஆல் இந்தியா கவுன்சில் ஆப் ஹியுமன் ரைட்ஸ் நிறுவனர் சுரேஷ்குமார், ஆல் இந்தியா நேஷனல் போலிஸ் மற்றும் பிரஸ்மீடியா சர்பர்சன் பிண்டோ, தமிழ்நாடு அரசு வள்ளலார் சிறப்பு குழு உறுப்பினர் ஆதி மகாசாது ஜோதி உமாபதி, தேசிய தலைவர் ஃபிலோமினாபெண்டம், பல்லாவரம் வேல்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் சைன்ஸ் டெக்னாலஜி மற்றும் அட்வான்ஸ் ஸ்டடிஸ் இணை பேராசிரியர் பிரபாகரன், ஸ்பார்க் அகடமியின் தனியார் நிறுவனத்தின் இயக்குநர் விஜயகுமார், ஆதித்யா சேனல் புகழ் நடிகர் சரவணன், ஆதித்யா சேனல் தொகுப்பாளர் விக்கி, ராக் போர்ட் எப்.எம். சித்ரா மற்றும் அன்னை இவண்ட் ஒருங்கினைப்பாளர் ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவு பரிசுகளும், தாய்பாச கரங்கள் சாரிடபுள் ட்ரஸ்டில் ஆல் இந்தியா ஹியுமன் ரைட்ஸின் சென்னை கிளை துவக்கபட்டு அதற்க்காக நிர்வாகிகள் நியமனம் செய்து அவர்களுக்கு அடையாள அட்டை, சான்றிதழ், பேஜ் மற்றும் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். இதனை தொடர்ந்து மாற்று திறனாளிகள் 5 பேருக்கு முன்று சக்கர சைக்கிள்கள், 100 க்கும் மேற்பட்ட சாலையோர வியாபாரிகளுக்கு மழை, வெயிலில் இருந்து தற்காத்து கொள்ள பெரிய அளவிலான வண்ண குடைகள் மற்றும் போர்வைகள், மரகன்றுகள் வழங்க ப்பட்ட ன.இந்நிகழ்ச்சியில் சென்னை, செங்கல்பட்டு, திருத்தணி உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து பயணாளிகள் கலந்து கொண்டனர். முன்னதாக நிகழ்ச்சியின் போது பொய்கால் குதிரை, சண்டை மேளம் முழங்க விருந்தினர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர்.




■ வேப்பனப்பள்ளி தொகுதியில் ₹2.50 லட்சம் பறிமுதல்:கிருஷ்ணகிரி மாவட்டம், 54 வேப்பனப்பள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூளகிரி தாலுகாவில் SST Team–2 Shift–1 அலுவலர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தபோது, அத்திமுகம் கூட்டுச்சாலை பகுதியில் எந்தவித ஆவணங்களும் இன்றி எடுத்துவரப்பட்ட ₹2,50,000 பணத்தை பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட தொகை வேப்பனப்பள்ளி சட்டமன்றத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி கீதா ராணி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.இந்நிகழ்வின்போது சூளகிரி வட்டாட்சியர் திரு ரமேஷ் மற்றும் காவல்துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

# மதுரையில் தேர்தல் சூடு: 10 தொகுதிகளில் ஏப்ரல் 23 வாக்குப்பதிவு 3079 வாக்குச்சாவடிகள் தயாராகின்றன




மதுரை, மார்ச். 17-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு மதுரை மாவட்டத்தில் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான கே.ஜே. பிரவீன் குமார், இ.ஆ.ப., தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது

மதுரை மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளுக்கும் ஏப்ரல் 23ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. வாக்கு எண்ணிக்கை மே 4ஆம் தேதி நடைபெறும். தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி மார்ச் 30 ஆம் தேதி முதல் கெஜெட் அறிவிப்பு வெளியிடப்படும். வேட்பு மனுக்கள் தாக்கல் ஏப்ரல் 6 வரை நடைபெறும். ஏப்ரல் 7ஆம் தேதி மனுக்கள் பரிசீலனை செய்யப்படும். ஏப்ரல் 9 வரை வேட்பு மனுக்களை திரும்பப் பெறலாம்.

தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ள நிலையில், ஒவ்வொரு தொகுதிக்கும் 9 பறக்கும் படைகள் என மொத்தம் 90 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் வெளி மாவட்ட வாகனங்களை சோதனை செய்ய 90 நிலையான கண்காணிப்பு குழுக்கள் செயல்படுகின்றன. தேர்தல் விதிமுறைகளை கண்காணிக்க வீடியோ கண்காணிப்பு குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டத்தில் மொத்தம் 3079 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் 100 சதவீத வெப்காஸ்டிங் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் 3691 தலைமை அலுவலர்கள் உட்பட மொத்தம் 14,764 வாக்குச்சாவடி அலுவலர்கள் தேர்தல் பணியில் ஈடுபட உள்ளனர்.

முதன்முறையாக வாக்களிக்க உள்ள இளைஞர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும். 85 வயதுக்கு மேற்பட்ட 1159 வாக்காளர்கள் மற்றும் 891 மாற்றுத்திறனாளிகள் வீட்டிலிருந்தே வாக்களிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இராணுவத்தில் பணிபுரியும் 5232 சர்வீஸ் வாக்காளர்களுக்கும் தபால் மூலம் வாக்களிக்கும் வசதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் ரூ.10 லட்சத்திற்கு மேல் ரசீது இல்லாமல் எடுத்துச் செல்லப்படும் பணம் பறிமுதல் செய்யப்படும் என்றும், பொதுமக்கள் ரூ.50,000க்கு மேல் பணம் எடுத்துச் செல்வதை தவிர்க்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

பொதுமக்கள் புகார் அளிக்க மாவட்ட கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளதுடன், 1800 425 4268 என்ற எண்ணை பயன்படுத்தலாம். தேர்தல் தொடர்பான தகவல்களை அறிய 'Voter Turnout', 'ECI Net', 'Suvidha 2.0', 'Saksham' போன்ற மொபைல் செயலிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பெண்கள் மட்டும் வாக்களிக்க 'பிங்க்' வாக்குச்சாவடி மையங்களும் அமைக்கப்பட உள்ளன.

முன்னதாக, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனை கூட்டமும் நடைபெற்றது. இதில் மாநகர காவல் ஆணையர் முனைவர் ஜெ. லோகநாதன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே. அரவிந்த் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# சமையல் காஸ் தட்டுப்பாடு கண்டித்து திமுக கூட்டணி ஆர்ப்பாட்டம் மதியழகன் எம்.எல்.ஏ பங்கேற்பு






கிருஷ்ணகிரி, மார்ச். 17-

சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டை போக்க நடவடிக்கை எடுக்காத ஒன்றிய அரசை கண்டித்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் திமுக கூட்டணி கட்சிகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கிருஷ்ணகிரி புதிய பஸ் நிலையம் அருகிலுள்ள அண்ணா சிலை எதிரில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்.எல்.ஏ தலைமை தாங்கினார். இதில் திமுக மற்றும் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டு ஒன்றிய பாஜக அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய மதியழகன் எம்.எல்.ஏ., "ஒன்றிய பாஜக அரசு தமிழ்நாட்டை தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. மக்களின் அத்தியாவசிய தேவையான சமையல் எரிவாயு சிலிண்டர் கூட கிடைக்காத நிலை உருவாகியுள்ளது. ஒன்றிய அரசின் தவறான வெளியுறவு கொள்கை மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்காததன் காரணமாக காஸ் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையில் உடனடியாக சமையல் எரிவாயு தட்டுப்பாட்டை சரிசெய்ய ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்," எனக் கூறினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ செங்குட்டுவன், திமுக மாநில வர்த்தகரணி துணை செயலாளர் அன்பரசன், மாவட்ட துணை செயலாளர் சாவித்திரி கடலரசுமூர்த்தி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் ரகு, மாவட்ட துணை தலைவர் தளபதி ரகமத்துல்லா உள்ளிட்ட கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.




# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்ற சக்கரவர்த்தி, வாஷிங்டன் சுந்தர்

சென்னை, மார்ச்.17-

டி20 உலக கோப்பை வென்ற இந்திய அணியில் இடம்பெற்ற வருண் சக்கரவர்த்தி, வாஷிங்டன் சுந்தர் இருவரும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை இன்று நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். விடாமுயற்சி, ஒழுக்கம், தன்னம்பிக்கையுடன் விளையாடி வெற்றி பெற்றது குறித்து கலந்துரையாடியதாக முதல்வர் தெரிவித்துள்ளார்.Long Distance Bus & Rail

இதுதொடர்பான புகைப்படங்களை தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்திருப்பதாவது:

தமிழகத்தைச் சேர்ந்த நம்முடைய "ஸ்பின் ட்வின்ஸ்" வாஷிங்டன் சுந்தர் மற்றும் வருண் சக்கரவர்த்தியுடனான மறக்க முடியாத தருணங்கள். இந்த சந்திப்பின்போது உறுதி, விடாமுயற்சி, கட்டுப்பாடு மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றால் செதுக்கப்பட்ட அவர்களின் பயணத்தைப் பற்றி, அவர்களுடன் ஒரு அற்புதமான கலந்துரையாடலை மேற்கொண்டேன். வாஷிங்டன் சுந்தர், வருண் சக்கரவர்த்தி ஆகியோருக்கு, இனிவரும் காலங்களில் மேலும் பல வெற்றியைத் தேடித்தரும் பந்துவீச்சுத் தருணங்களும், பெருமைமிக்க தருணங்களும் அமைய வாழ்த்துகிறேன் என தெரிவித்தார்.

# நீலகிரி மாவட்டம் பந்தலூர் காரக்கொல்லி சர்ச் மண்டபத்தில் இலவச கண் சிகிச்சை முகாம்




நீலகிரி மார்ச். 17-

நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே காரக்கொல்லி சர்ச் மண்டபத்தில் நடைபெற்ற இலவச கண் சிகிச்சை முகாமில் 150க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

25 பேர் கண் புரை அறுவைக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

உலக நுகர்வோர் தினம் மற்றும் உலக குளுக்கோமா தினத்தை முன்னிட்டு காரக்கொல்லி சென் மேரிஸ் சர்ச் மண்டபத்தில் இலவச கண் சிகிச்சை முகாம் மற்றும் குளுக்கோமா பாதிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

கூடலூர் நுகர்வோர் பாதுகாப்பு மையம், நீலகிரி மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம், கர்மேல் ஷாலோம் சாரிட்டபிள் டிரஸ்ட், காரக்கொல்லி சென் மேரிஸ் சர்ச், பந்தலூர் தாலுக்கா மாற்றுதிறனாளி நலச்சங்கம் ஆகியன இணைந்து நடத்திய

இலவச கண் சிகிச்சை முகாமிற்கு பந்தலூர் தாலுக்கா மாற்று திறனாளி நலச்சங்க தலைவர் அசோக்குமார் தலைமை தாங்கினார். காரக்கொல்லி சர்ச் நிர்வாகிகள் ஜோஸ், ஷிஜி முன்னிலை வகித்தனர்.

உதகை மருத்துவ கல்லூரி கண்மருத்துவ பிரிவு துறை தலைவர்

மரு. அம்பிகா பேசும்போது குளுக்கோமா என்பது கண்ணின் அழுத்தம் அதிகரிப்பதால் ஏற்படுகிறது. இது கண்ணின் நரம்புகளை பாதித்து, பார்வை இழப்புக்கு வழிவகுக்கும். கண்ணின் அழுத்தம் அதிகரிப்பு, வயதாவது, உயர் இரத்த அழுத்தம் ஆகியன காரணமாக குளுக்கோமா பாதிப்பு ஏற்படும். தொடர் கண் வலி, தலைவலி, பார்வை மங்கல், கண்ணில் அழுத்தம் உள்ளிட்டவை இதன் அறிகுறிகளாகும். குளுக்கோமா பாதிப்பு இருந்தால், உடனடியாக கண் மருத்துவரை அணுகி சிகிச்சை பெற்றால் குணப்படுத்தலாம் என்றார்

தொடர்ந்து நடைபெற்ற கண் சிகிச்சை முகாமினை கூடலூர் நுகர்வோர் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம், சென் மேரிஸ் ஜாக்கோபைட் சர்ச் பாதிரியார் சான் ஜேக்கப், கர்மேல் ஷாலோம் டிரஸ்ட் நிர்வாகி தனராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

உதகை அரசு மருத்துவ கல்லூரி கண் மருத்துவ குழுவினர் மருத்துவ அலுவலர்கள் அம்பிகா, தாவா மற்றும் ஜெப்ரின் உள்ளிட்டோர் கொண்ட குழுவினர் முகாமில் பங்கேற்ற 150 க்கும் மேற்பட்டோருக்கு கண் சம்பந்தமான குறைபாடுகளுக்கு பரிசோதனை செய்தனர்.

முகாமில் கிட்ட பார்வை, தூர பார்வை, கண் அழுத்தம் கண்ணில் ஏற்படும் இதர பிரச்சனைகளுக்கு பரிசோதனை செய்து ஆலோசனைகள் வழங்கினார்கள். இதில் 25 பேர் கண் புரை பாதிப்பு, 8 பேருக்கு கண் சதை வளர்ச்சி பாதிப்புகள் 3 பேருக்கு குளுக்கோமா பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது.

23 பேர் கண்புரை அறுவை சிகிச்சைக்கு தேர்வு செய்யபட்டு, உதகை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில்

இலவச கண் புரை அறுவை சிகிச்சைக்கு அழைத்து செல்லபட்டனர். மற்றவர்கள் உரிய சிகிச்சை பெற மருத்துவ கல்லூரிக்கு பரிந்துரை செய்யப்பட்டனர்.

முகாமில் நுகர்வோர் மைய நிர்வாகிகள், மாற்று திறனாளி நலச்சங்க நிர்வாகிகள், சர்ச் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 முன்னிட்டு ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு, பறக்கும் படை குழு, நிலை கண்காணிப்பு குழு, வீடியோ கண்காணிப்பு குழுக்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஸ் அசோக் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாநகர காவல் துணை ஆணையர் பிரவீன் கௌதம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) து.சு.துரைமுருகன், திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) ஈஸ்வரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.







## அழகப்பா பல்கலைக்கழகத்தில் ‘MEDIA-2K26’ சர்வதேச மாநாடு துவக்கம்

காரைக்குடி மார்ச். 17-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை சார்பில் “MEDIA-2K26” என்ற தலைப்பில் ஊடகக் கல்வி, டிஜிட்டல் புத்தாக்கம் மற்றும் மேம்பாடு குறித்த இரண்டு நாள் சர்வதேச மாநாடு 13.03.2026 அன்று தொடங்கியது.

நிகழ்ச்சிக்கு துறை தலைவர் முனைவர் நீ. ஜான்சன் வரவேற்புரை வழங்கினார். துணைவேந்தர் கர்னல் முனைவர் க. ரவி தலைமை தாங்கி உரையாற்றினார். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சி மைய பேராசிரியர் ஜூலியன் ஜீன் மலார்ட் ஆடம் சிறப்புரை வழங்கினார். அண்ணா பல்கலைக்கழகத்தின் கல்வியில் மல்டிமீடியா ஆராய்ச்சி மைய இயக்குநர் பேராசிரியர் அருள்செல்வன் ஸ்ரீராம் குறிப்புரை ஆற்றினார். கலைப்புலத் தலைவர் முனைவர் ராசாராம் மற்றும் நிதி அலுவலர் பேராசிரியர் சந்திரமோகன் வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்வில் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் சமர்ப்பித்த ஆய்வு கட்டுரைகள் தொகுப்பு வெளியிடப்பட்டது. இறுதியில் உதவிப் பயிற்றுநர் மு. ஹரிபாஸ்கர் நன்றியுரை ஆற்றினார். மாநாட்டில் பல மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## தேர்தல் நன்னடத்தை விதிகள் அமல்: சிவகங்கையில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் ரத்து

சிவகங்கை, மார்ச்.17-

சிவகங்கை மாவட்டத்தில்தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளதை அடுத்து, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாரந்தோறும் திங்கட்கிழமை நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் தற்காலிகமாக ரத்து செய்யப்படுவதாக மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள



முக்கிய தகவல்கள்:

மனுக்கள் அளிக்கும் முறை: பொதுமக்கள் தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை நேரடியாக அளிக்க வேண்டிய அவசியமில்லை. அதற்குப் பதிலாக, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் தரைத் தளத்தில் உள்ள சமூக பாதுகாப்புத் திட்ட அலுவலகத்தின் முன்புறம் ஒரு சிறப்புப் பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

மாற்று ஏற்பாடு: பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மனுக்களை அந்தப் பெட்டியில் போட்டுச் செல்லலாம். இந்த நடைமுறை தேர்தல் விதிகள் அமலில் இருக்கும் வரை தொடரும்.தேர்தல் கால கட்டுப்பாடுகளைப் பின்பற்றி, பொதுமக்கள் இந்த மாற்று ஏற்பாட்டினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.




■ நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டுவரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறையின் செயல்பாடுகளான சிவிஜில், சமூக ஊடகம், ஊடக கண்காணிப்பு மையம், மாவட்ட தொடர்பு மையம் ஆகியவற்றை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர்நாராயணன் உட்பட பலர் உள்ளனர்.

## கண்டனூர் மதுபானக் கூடத்திற்கு அனுமதி: மாவட்ட பாஜக தலைவர் பாண்டித்துரை கடும் கண்டனம்

காரைக்குடி மார்ச். 17-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே கண்டனூரில் முறைகேடாக மதுபானக் கூடம் (FL2 Bar) அமைக்கப்படுவதை எதிர்த்து, சிவகங்கை மாவட்ட பாஜக தலைவர் பாண்டித்துரை தலைமையில் அக்கட்சியினர்மற்றும் பொதுமக்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.



பேக்கரி பெயரில் மதுபானக் கூடமா?இது தொடர்பாக பாண்டித்துரை வெளியிட்டுள்ள அறிக்கையில், கண்டனூர் பேரூராட்சியில் "பேக்கரி" தொடங்கப் போவதாக அனுமதி பெற்றுவிட்டு, அதற்குப் பின்னால் மதுபானக் கூடம் அமைக்கும் பணிகள் ரகசியமாக நடைபெற்று வருவதாகக் குற்றம் சாட்டியுள்ளார். இது குறித்து விசாரணை செய்ததில், காரைக்குடி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஆய்வாளர் இதற்குஅனுமதி வழங்கவில்லை என்பது தெரியவந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முக்கிய இடங்களின் பாதுகாப்பு கேள்விக்குறிமதுபானக் கூடம் அமையவுள்ள இடத்தைச் சுற்றி அமைந்துள்ள இடங்களை அவர் பட்டியலிட்டார்: * நொண்டி கருப்பர் கோவில்: வழிபாட்டுத் தலத்திற்கு மிக அருகிலேயே இது அமைகிறது.

ரயில்வே கேட்: மக்கள் மற்றும் வாகன நெரிசல் மிகுந்த ரயில்வே கேட் பகுதியிலிருந்து வெறும் 300 அடி தொலைவில் இது உள்ளது.

மாநில நெடுஞ்சாலை: காரைக்குடி பட்டுக்கோட்டை நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதால் விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக அவர் சுட்டிக்கா ட்டினார்.சட்டமன்ற உறுப்பினர் மீது விமர்சனம்காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி, முன்னதாக பர்மா காலனி பகுதியிலும் இது போன்ற செயல்களுக்கு அனுமதி அளித்ததை நினைவு கூர்ந்த பாண்டித்துரை, தற்போது கண்டனூரிலும் அதே போன்ற நிலை ஏற்படுவது கண்டிக்கத்தக்கது என்றார். ஏற்கனவே இது தொடர்பாக அப்பகுதி பெண்கள் திரண்டு மறியல் செய்தும், மனுக்கள் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர் அதிருப்தி தெரிவித்தார்.போராட்ட எச்சரிக்கை கண்டனூர் மற்றும் புது வ யல் பகுதி மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல், இந்த மதுபானக் கூடம் திறக்கப்பட்டால், பாரதிய ஜனதா கட்சி பொதுமக்களுடன் இணைந்து மாபெரும் போராட்டங்களை முன்னெடுக்கும் என மாவட்ட தலைவர் பாண்டித்துரை எச்சரித்துள்ளார்.



## சிவகங்கை மாவட்ட சட்டப்பேரவைத் தேர்தல் 2026: முக்கிய அறிவிப்புகள்

சிவகங்கை மார்ச். 17-

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 4 தொகுதிகளுக்கான தேர்தல் அட்டவணை மற்றும் வழிகாட்டுதல்களை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ளார்.

1. தேர்தல் கால அட்டவணை

சிவகங்கை மாவட்டத்திற்குட்பட்ட காரைக்குடி, திருப்பத்தூர், சிவகங்கை மற்றும் மானாமதுரை (தனி) ஆகிய தொகுதிகளுக்கான முக்கியத் தேதிகள்:

* வேட்புமனுத் தாக்கல் தொடக்கம்: 30.03.2026
* வேட்புமனுத் தாக்கல் முடிவு: 06.04.2026 (காலை 11:00 மணி முதல் மதியம் 3:00 மணி வரை)
* வேட்புமனுக்கள் பரிசீலனை: 07.04.2026
* மனுக்களைத் திரும்பப் பெற கடைசி நாள்: 09.04.2026
* வாக்குப்பதிவு நடைபெறும் நாள்: 23.04.2026

2. தேர்தல் நடத்தை விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள்

15.03.2026 முதல் மாதிரி நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன. இதன்படி:

* பொது இடங்கள் மற்றும் தனியார் இடங்களில் விளம்பரம் செய்தல், போஸ்டர் ஒட்டுதல் மற்றும் சுவர் எழுத்துகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
* துப்பாக்கி உரிமம் வைத்துள்ளவர்கள் உடனடியாக அருகில் உள்ள காவல் நிலையத்தில் தங்களது ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும்.
* மக்கள் தொடர்பு முகாம்கள் மற்றும் குறை தீர்க்கும் நாள் கூட்டங்கள் தேர்தல் முடிவடையும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் தங்கள் மனுக்களை ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பெட்டியில் போடலாம்.
* தேர்தல் புகார்களைத் தெரிவிக்க 1800 425 7036 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளலாம்.

3. வாக்காளர்கள் விவரம் (23.02.2026 நிலவரப்படி)

மாவட்டத்தின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 11,10,599 ஆகும். தொகுதி வாரியான விவரங்கள்:

| தொகுதி | வாக்குச் சாவடிகள் | ஆண்கள் | பெண்கள் | இதரர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| காரைக்குடி | 388 | 1,48,087 | 1,55,256 | 28 | 3,03,371 |
| திருப்பத்தூர் | 368 | 1,34,270 | 1,39,183 | 3 | 2,73,456 |
| சிவகங்கை | 393 | 1,35,113 | 1,41,039 | 4 | 2,76,156 |
| மானாமதுரை (தனி) | 369 | 1,23,665 | 1,31,048 | 3 | 2,57,616 |
| மொத்தம் | 1518 | 5,44,035 | 5,66,526 | 38 | 11,10,599 |

4. தேர்தல் கண்காணிப்பு ஏற்பாடுகள்

ஒவ்வொரு தொகுதிக்கும் 3 பறக்கும் படைகளும், 3 நிலையான கண்காணிப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவை 24 மணி நேரமும் சுழற்சி முறையில் கண்காணிப்புப் பணியில் ஈடுபடும்.

தேர்தல் அமைதியாகவும், நேர்மையாகவும் நடைபெற அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.



## சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரிக்கு புதிய முதல்வர் நியமனம்

சிவகங்கை மார்ச். 17-

சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் புதிய முதல்வராக டாக்டர் ஆர். செல்வராஜன் (மார்ச் 14, 2026) முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டார்.



முன்னதாக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரியில் மயக்கவியல் துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வந்த இவர், பதவி உயர்வின் அடிப்படையில் சிவகங்கை மருத்துவக் கல்லூரிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

முக்கியத் தகவல்கள்:

புதிய முதல்வர்: டாக்டர் ஆர். செல்வராஜன்

முந்தைய பணி: பேராசிரியர் (மயக்கவியல்), திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி.

பதவி மாற்றம்: இதுவரை சிவகங்கை மருத்துவக் கல்லூரி முதல்வராகப் பணியாற்றிய டாக்டர் இ. சீனிவாசன் இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அந்த இடத்திற்கு டாக்டர் ஆர். செல்வராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் பொறுப்பேற்றுக் கொண்ட போது மருத்துவமனை அதிகாரிகள் மற்றும் பேராசிரியர்கள் உடனிருந்தனர். புதிய முதல்வர் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, மருத்துவமனையின் செயல்பாடுகள் மற்றும் மருத்துவக் கல்வித் திட்டங்கள் மேலும் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## திருப்பூர் பாரத் கேஸ் தலைவர் சாமிவேல் பொதுமக்களுக்கு அறிவிப்பு

திருப்பூர், மார்ச்.17-

திருப்பூர் பாரத் கேஸ் தலைவர் சாமிவேல் பொதுமக்களுக்கு ஒரு அறிவிப்பை வெளியிட்டார். மக்களுக்கு தேவையான அடுப்பு எரிவாயு சிலிண்டர்கள் இருப்பு உள்ளது. ஈரான் இஸ்ரேல் அமெரிக்கா போர் நடப்பதால் சிலிண்டர், எரிவாயு கிடைக்காது, என கூறும் பொய்யான செய்திகளையும், வதந்திகளையும், நம்ப வேண்டாம். வதந்திகளால் மக்கள் எரிவாயு சிலிண்டர் கிடைக்காது என்று நினைத்து. தனது தேவைக்கு அதிகமாக அடுப்பு எரிவாயு சிலிண்டர்களை. கேஸ் ஏஜென்சியில் மக்கள் பதிவு செய்து வருகின்றனர். வழக்கமாக எங்களது ஏஜென்சியில் 100 முதல் 125 வரை சிலிண்டர்கள் பதிவு ஏற்படும். ஆனால் பொய்யான வதந்திகளை நம்பி இன்று எங்களது ஏஜென்சியில் வழக்கத்திற்கு மாறாக. 400 முதல் 500 வரை எரிவாயு சிலிண்டர்கள் பதிவாகி வருகின்றனர். மக்களுக்கு தேவையான எரிவாயு சிலிண்டர்கள் எல்லோருக்கும் வழங்கப்படும். என திருப்பூர் மாவட்ட பாரத் கேஸ் தலைவர் சாமிவேல் தகவல்களை தெரிவித்தார்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக்குழு, வீடியோ கண்காணிப்புக் குழு(FST/SST/VST) வாகனங்களை மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப.,கொடியசைத்து துவக்கி வைத்தார். மாநகர காவல் ஆணையார் முனைவர் ஜெ.லோகநாதன், இ.கா.ப., ,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த் இ.கா.ப., ஆகியோர் உடன் உள்ளனர்.

## தேர்தல் நடத்தை விதிமீறல்: நாம் தமிழர் கட்சியினர் மீது வழக்குப்பதிவு

தென்காசி, மார்ச்.17-

தென்காசி மாவட்டம் ஊத்துமலை பகுதியில் தேர்தல் நடத்தை விதிகளை மீறி நாம் தமிழர் கட்சி யினர் வாக்குச்சாவடி முகவர்கள் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தினர். பறக்கும் படையினர் அளித்த புகாரில் அக்கட்சியின் கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர் சரவணன் மீது 2 பிரிவுகளில் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161